# கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
# இலங்கைத் தேயிலைச் சபை

# வெற்றிடம்

இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் ஒழுங்கு, அபிவிருத்தி, விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக செயற்படும் முன்னோடி அரச நிறுவனமான இலங்கை தேயிலை சபையில் அங்கீகாரம் பெற்ற ஊழியர் எண்ணிக்கைக்குள் நிலவும் பராமரிப்பு அதிகாரி வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த, செயற்றிறன் மிக்க, ஆக்கத்திறனுள்ள மற்றும் நன்னடத்தையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பராமரிப்பு அதிகாரி பதவி தரம் II JM (1-1)**

**கடமை விபரம்**

சபையின் எல்லா கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் பராமரிப்பு வேலைகள் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் பராமரிப்புப் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொறிமுறை அல்லது சிவில் அல்லது மின்சார பொறியியல் (B.sc) இளமாணிப் பட்டம் மற்றும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்க அல்லது பிரசித்தி பெற்ற தனியார் துறை நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் தகைமைக்குப் பின்னரான ஆக்குறைந்தது ஒரு (01) வருட கால அனுபவம்

**அல்லது**

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொறிமுறை அல்லது சிவில் அல்லது மின்சார எந்திரவியல் துறையில் பெற்றுக்கொண்ட தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (NDT) மற்றும் டிப்ளோமாவைப் பெற்ற பின் அரசாங்க அல்லது தனியார் துறையின் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் தகைமைக்குப் பின்னரான ஆக்குறைந்தது ஆறு (06) வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) இலங்கைத் தேயிலைச் சபையில் 1ஆம் தர தொழில்நுட்பவியல் உதவியாளர் (பராமரிப்பு) பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை மற்றும் பொறிமுறை அல்லது சிவில் அல்லது மின்சார எந்திரவியல் துறையில் தேசிய தொழிற்றிறன் தகைமை (NVQ) 5ஆம் மட்டத்துக்குக் குறையாத சான்றிதழ்.

**கனிஷ்ட முகாமையாளர் சம்பள அளவு, வயதெல்லை மற்றும் தெரிவு முறை:**

**சம்பள அளவு:** JM 1-1-2016: ரூ. (42,600 – 10x 755 - 18x1135 - ரூ. 70,580 (மாதாந்தம்)
ஆரம்ப சம்பள நிலை மாதாந்தம் 42,600.00 ரூபாவாகும். இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் உட்பட மாதாந்த மொத்த சம்பளம் ஏறக்குறைய ரூ. 65,400/-

**வயதெல்லை:**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதல்ல.

**தெரிவு செய்யும் முறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம்.

**பொது நிபந்தனைகள்:**

- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எப்பாகத்திலும் கடமையாற்றத் தேவையான சிறந்த உடல், உள தகுதியுடன் சிறந்த தேகாரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரிகளும் சிறந்த நன்னடத்தையுடைய நபர்களாயிருத்தல் வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்படும் வெளி விண்ணப்பதாரர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தி சேர்க்கப்படுவர் என்பதுடன் பதவியில் நிரந்தரமாக்கப்படும் உள்ளக விண்ணப்பதாரர்கள் ஒரு வருட பரிசீலனைக் காலத்தின் கீழ் நியமிக்கப்படுவர்.
- தேர்ந்தெடுக்கப்படும் சகல வெளி விண்ணப்பதாரர்களும் குறித்த சம்பள அளவின் ஆரம்ப நிலையில் அமர்த்தப்படுவார் என்பதுடன் உள்ளக விண்ணப்பதாரர்களின் சம்பளம் தாபனக் கோவையின் viiம் உப அத்தியாயத்தின் 04ம் அத்தியாயத்தின் பிரகாரம் அமர்த்தப்படுவர்.

**ஏனைய அனுகூலங்கள்:**

- சபையில் தற்போது நிலவும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக வைத்திய நிவாரண வசதிகள் வழங்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் அவரது சம்பளத்தின் 10% த்தை ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பாகச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன் இதன்பொருட்டு சபையினால் 15% பங்களிப்பு செய்யப்படும்.
- சபையினால் மேலும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு அவரது சம்பளத்தின் 3% பங்களிப்பு செய்யப்படும்.

**விண்ணப்பித்தல்:**

இந்த அலுவலகத்தில் அல்லது www.srilankateaboard.com எனும் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய உரிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ் மற்றும் தகைமைகள் / அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2024 ஒக்டோபர் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்/திணைக்களத் தலைவரின் சிபாரிசுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கைத் தேயிலைச் சபை,**
**574, காலி வீதி, கொழும்பு 3.**